இணைப்பு 03

தங்களது வீட்டின் ஆள்கூறுகளை (coordinates) கண்டறியக்கூடிய முறை சம்பந்தமான அறிவுறுத்தல் பத்திரம்

Android Phone பயன்படுத்தி Coordinates பெற்றுக்கொள்ளும் முறை

Google Maps செயலியைப் பயன்படுத்தி உங்கள் வீட்டு இருப்பிடத்தின் ஆள்கூறுகளைப் பெற்றுக்கொள்ளும் முறை சம்பந்தமாக இந்த அறிவுறுத்தல் பத்திரம் விவரிக்கின்றது.



படிமுறைகள்

1. Google Maps செயலியைத் திறக்கவும்.

2. உங்கள் தொலைபேசியில் Google Maps செயலி இல்லையாயின், அதை Play Store இலிருந்து பதிவிறக்கம் செய்து நிறுவவும்.

3. தங்களது Location மற்றும் Mobile Data செயலிலுள்ளதா என உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.



2



3

4. இப்போது உங்கள் தொலைபேசியை, உங்களுக்கு நீர் இணைப்பு தேவைப்படும் இடத்திற்கு எடுத்துச் சென்று, உங்கள் இருப்பிடம் நிலைபெறும் வரை சிறிது நேரம் காத்திருங்கள்.

5. தாங்கள் வீட்டின் உள்ளே இருப்பதாயின், வெளியே சென்று தங்களது இருப்பிடத்தை உறுதிப்படுத்திக்கொள்ளும் வரை காத்திருங்கள்.

6. **"Find my location"** செயலியை தெரிவு செய்து தங்களது இடத்தைப் (Zoom) பெரிதாக்கி கொள்ளவும்

7. தங்களது இருப்பிடம் உறுதிப்படுத்தப்படாதவிடத்து இள நீல நிறத்தினாலான பெரிய வட்டமொன்றினை கண்டுகொள்ள முடியும்.

8. **ஆள்கூறுகளை (Coordinates) பெற்றுக்கொள்ளும் முறை**
   1. தங்களது வீடு அமைந்துள்ள சரியான இடத்தின் மேல் தொடர்ச்சியாக அழுத்திப் பிடிக்கவும். அப்போது ஒரு சிவப்பு நிற (red Pin) குறி தோன்றும்.

   2. ஆள்கூறுகள் (Coordinates) தேடும் நிரலில் அல்லது திரையின் கீழ் பகுதியில் தோன்றும்.
      உதாரணமாக: அகலக்கோடு - 6.809273
      நெடுங்கோடு - 79.884368



7



8